ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2196/42 - 2020 ඔක්තෝබර් මස 08 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.08

*2196/42 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**5 ஆவது திருத்தம்**

இலங்கை திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இல. 2137/26 மற்றும் 2019, ஓகத்து 20 ஆந் திகதிய, இல. 1992/ 77 மற்றும் 2016, நவெம்பர் 11 ஆந் திகதிய, இல. 1816/ 32 மற்றும் 2013, யூன் 28 ஆந் திகதிய, இல 1783/37 மற்றும் 2012, நவெம்பர் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட இல. 1670/32 மற்றும் 2010, செத்தெம்பர் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ.பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2020, செத்தெம்பர் 30.

**உத்தேச திருத்தங்கள்**

**05. சம்பளம் :**

| | | |
|---|---|---|
| 5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் | : | சிரேஷ்ட நிறைவேற்றுநர் – SL-3-2016<br>நிறைவேற்றுநர் – SL-1-2016 |
| 5.2 சம்பள அளவு | : | சிரேஷ்ட நிறைவேற்றுநர் – SL-3-2016- ரூபா 88,000-12 x ரூபா 2,700- ரூபா 120,400<br>நிறைவேற்றுநர் – SL-1-2016- ரூபா 47,615-10x ரூபா 1,335- 8 x ரூபா 1,630- 17 x ரூபா 2,170- ரூபா 110,895 |



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

5.3 தர முறைக்கு அமைய ஆரம்ப சம்பளம்

| தரம் | சம்பளப் படிமுறை | அடிப்படைச் சம்பளம் (மாதாந்தம்) |
|---|---|---|
| தரம் III | 1 (SL-1-2016) | ரூபா 47,615.00 |
| தரம் II | 12 (SL-1-2016) | ரூபா 62,595.00 |
| தரம் I | 20 (SL-1-2016) | ரூபா 76,175.00 |
| விசேட தரம் | 1 (SL-3-2016) | ரூபா 88,000.00 |

07. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

7.3 **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு**

7.3.2.3 அனுபவம்

தனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள, விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அறிவித்தல், வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் 7.3.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் சம்பளக் குறியீட்டு இலக்கம் MN1-2016 அல்லது அதனை விட உயர்ந்த MN சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறும் அல்லது SL-1-2016 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறும் ஒரு சேவையில் / பதவியில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

10.3 **தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல்**

10.3.1 பூரணப்படுத்த வேண்டிய தகைமைகள் :-

i. குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். ('உ' பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம்)

ii. பதவியுயர்விற்காக தகைமை பரீட்சிக்கப்படும் திகதிக்கு சேவையில் முதலாவது தரத்தில் ஐந்து (05) வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் முதற் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

iii. பதவியுயர்விற்காக தகைமை பரீட்சிக்கப்படும் திகதிக்கு சேவையில் பதினெட்டு (18) வருடங்களுக்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

iv. பதவியுயர்விற்காக தகைமை பரீட்சிக்கப்படும் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருட காலப்பகுதியில் வருடாந்த செயலாற்றுகை மட்டம் திருப்திகரமானதாக அல்லது உயர் மட்டத்தில் இருத்தல்.

v. பதவி உயர்வுக்காக தகைமைகள் பரீட்சிக்கும் தினத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

vi. மூன்றாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை உரிய திகதியில் பூரணப் படுத்தியிருத்தல்.

10.3.2 பதவி உயர்வு முறை :-

மேற்கூறப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தரொருவர் ஒவ்வொரு வருடமும் சனவரி 01 ஆந் திகதியன்று மற்றும் யூலை மாதம் 01 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்படுவர்.

**குறிப்பு :**

1. வெற்றிடங்கள் கணிப்பிடப்படும் திகதிக்கு தரம் I உத்தியோகத்தர்களின் சேவைமூப்புக்கு அமைய வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கிற்கு மேற்படாத 10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சேவைமூப்பு என்பன மாத்திரம் நேர்முகப் பரீட்சை சபையினால் பரீட்சிக்கப்படும்.

3. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையினால் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுக்கு அமைய வெற்றிடங்கள் கணிப்பிட்டப்படும் திகதிக்கு தரம் I இல் உள்ள உத்தியோகத்தர்களின் சேவைமூப்பு தொடர் ஒழுங்குக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையைக் கொண்ட உத்தியோகத்தர்கள் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.